பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 8 (23—7—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 9 (24—7—68) புதன் [இதழ்: 33

## இரயிலில் சிக்கிய அரிசி!

சென்னை, ஜூலை 23—
திங்கட்கிழமை காலை காஞ்சிபுரத்திலிருந்து வந்த இரண்டு இரயில் வண்டிகளைத் திடீரெனச் சோதனையிட்டதன் மூலம் 2,583 கிலோ அரிசி, அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

கைப்பற்றப்பட்ட இந்த அரிசிக்கு யாரும் உரிமை கொண்டாடவில்லை; அதனுல் யாரும் கைது செய்யப்படவும் இல்லை.

இந்த அரிசி, இரயில் வண்டியின் நீர்த் தொட்டிக்கு அடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாம்.

# இந்தியில் பதவி உறுதி ஏலோம்!

## வெளிநாட்டுக் கொள்கையில் தலைகுனியும் நிலை

### இராசதந்திரத்தில் இந்தியா தோல்வி?

### இருபதாண்டு இரஷ்ய நட்புறவில் மாற்றமா?

டெல்லி அரசுமீது கடும் குற்றச்சாட்டு—
மக்களவையில் கி. மனோகரன் முழக்கம்

புதுடில்லி, ஜூலை 22—

"இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை முழுவதையுமே மாற்றியமைக்க வேண்டும்; ஆனால் இந்த மாற்றம் இந்திய—சோவியத் நட்புறவைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும்.

"இரஷ்யாவிலுள்ள இந்தியத் தூதுவரகம், இப்பிரச்சினை சம்பந்தமாக இரஷ்யா கடைபிடித்துக்கொண்டு வந்திருக்கும் கொள்கையை டெல்லிக்கு உணர்த்துவதில் தவறிவிட்டது. ஆங்காங்குள்ள இந்தியத் தூதுவரகம் இயங்கும் முறை பற்றி விசாரிக்கப்பட வேண்டும்.

"கடந்த 20 ஆண்டுக்காலமாக சோவியத் இரஷ்யா, இந்தியாவின் உண்மை நண்பனாக இயங்கிவந்திருக்கிறது. இதன் காரணமாக இந்தியா பல பிரச்சினைகளையும் இரஷ்யாவிடம் நம்பி ஒப்படைத்திருக்கிறது; இந்நிலையில், சோவியத் கொள்கையில் ஏதாவது மாற்றம் ஏற்படக் கூடுமானால், அது இந்திய இராசதந்திரத்தின் தோல்வியாகவே கருதுகிறேன்"

இவ்வாறு, நாடாளுமன்ற மக்களவையில், தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கினார்.

பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி செய்வது குறித்து மக்களவையின் இன்றையக் கூட்டத்தில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது; இத்தீர்மானத்தின்மீது பேசுகையில் கி. மனோகரன் ஆற்றிய உரையாவது:—

"இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மகத்தான தோல்வியடைந்துவிட்டது என்பதையே பாகிஸ்தானுக்கு சோவியத் ஆயுத உதவி காட்டுகிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக சோவியத் இரஷ்யா, இந்தியாவிடம் நட்புடன் இருந்துவருகிறது; திடீரென்று பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்வதென்று அது முடிவு செய்வானேன்?

'ஆயுத உதவி பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை' எனத் தலைமையமைச்சர் கூறுகிறார்; அதுபற்றி சோவியத் இரஷ்யாவிடமிருந்து அதிகாரபூர்வமான தகவல் எதுவும் கிடையாது; அப்படியானால், நமது மறுப்பைத் தெரிவித்து நிறுத்துவதற்கு இந்தியாவுக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது.

அயல்நாட்டு இலாகாவும் இரஷ்யாவில் உள்ள இந்தியத் தூதுவரகமும் சோவியத் இரஷ்யாவின் போக்கை முன்னரே அறியத் தவறிவிட்டன; இது பற்றி உயர் மட்ட விசாரணை நடத்தவேண்டும்.

அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளாதவர்களுக்குக்கூட கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக சோவியத் இரஷ்யாவின் கொள்கையில் ஒரு மாறுதல் இருப்பது தெரியவந்தது.

இந்த நாட்டின் வெளிநாட்டு உறவுகளை இந்த அரசு மிகவும் சிக்கலாக்கிவிட்டது; அதனால், இத்தகைய தலைகுனிவு நிலை ஏற்பட்டுவிட்டது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்; நமது நாட்டின் மதிப்பே இப்பொழுது ஆட்டம் கண்டிருக்கிறது!

சோவியத் இரஷ்யாவின் முடிவு, டெல்லிக்குவிழிப்பை ஏற்படுத்த வேண்டும்; பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய துறைகளில் நாம் சுயபலத்துடன் இயங்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

பாகிஸ்தானுக்கு ஆயுதம் தருவதற்கு இரஷ்யாவுக்கு உரிமை உண்டு; அதைத் தடுப்பதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது; ஆனால், இராசதந்திரத்தின் மூலம் நாம் அதைத் தடுத்திருக்கலாம்."

### ஒத்திவைப்புத் தீர்மானம் நிராகரிப்பு

புதுடில்லி, ஜூலை 22—

"பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி செய்வது பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டும்" என்று நாடாளுமன்ற மக்களவையில் சுதந்தராக் கட்சி உறுப்பினர் பிலூ மோடியால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து 61 ஓட்டுகளும், எதிர்த்து 206 ஓட்டுகளும் கிடைத்ததால் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

தீர்மானம் நிறைவேறவில்லையென்றாலும், சபையின் எல்லாத் தரப்பினரும்—வலது கம்யூனிஸ்டுத் தலைவர் டாங்கே உட்பட—இரஷ்யாவின் புதிய முடிவின்மீது தங்களது அச்சத்தை வெளிப்படுத்தினர்.

வலது—இடது கம்யூனிஸ்டுக் கட்சிகள் தவிர, ஜனசங்கம், பி.எஸ்.பி., எஸ்.எஸ்.பி., தி.மு.க. உட்பட எல்லா எதிர்க் கட்சிகளும் தீர்மானத்தை ஆதரித்தனர்.

ஓட்டெடுப்பின்போது இடது கம்யூனிஸ்டுகள் சபையில் இல்லை; வலது கம்யூனிஸ்டுகள் தீர்மானத்தை எதிர்த்து ஓட்டளித்தனர்.

## இந்தி மாநிலத்திலேயே இந்திக்கு ஏற்பட்ட கதி!

### காசி நகராட்சியில் உருது—வங்க மொழிகளில் பதவியேற்பு

வாரணாசி, ஜூலை 22—

இந்தி வழங்கும் மாநிலமான உத்தரப் பிரதேசத்திலேயே—இந்தி வெறியர்கள் மிகுந்துள்ள நகரமான வாரணாசியிலேயே (காசி) இந்திக்கு எதிராகக் குரலெழுப்பிய நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கிறது.

வாரணாசி நகராட்சிமன்ற உறுப்பினர்களில் 20 பேர் இந்தி மொழியில் பதவி உறுதி எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டனர், மாறாக, இந்தி மீது தாங்கள் கொண்டிருக்கும் எதிர்ப்பையே வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

வாரணாசி நகராட்சி மன்றத்தில் பத்தொன்பது பேர் முஸ்லிம்கள் ஆவர்; இந்த 19 பேரும் இந்தியில் பதவி உறுதி எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டனர்; தங்கள் தாய்மொழியான உருது மொழியிலேயே பதவி உறுதி எடுத்துக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துவிட்டனர்.

பதவி உறுதி எடுக்கும் நிகழ்ச்சி வாரணாசி மாஜிஸ்திரேட் வீட்டின் அறைக்குள்—பலத்த பாதுகாப்பு ஏற்பாட்டுக்கிடையே—நடைபெற்றது.

பத்தொன்பது முஸ்லிம் உறுப்பினர்களும், தங்கள் தாய்மொழியான உருது மொழியிலேயே பதவி உறுதி எடுத்துக்கொண்டனர்.

எஞ்சியுள்ள இருபதாவது உறுப்பினரும் இந்தியில் பதவி உறுதி எடுத்துக்கொள்ள மறுத்து வங்காளி மொழியில் எடுத்துக்கொண்டார்; ஆனால் அவர், வங்காள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரல்லர்; இந்தியின்மீது தமக்குள்ள எதிர்ப்பைக் காட்டவே அவர் இப்படி இந்தியல்லாத ஒரு மொழியில் (வங்காளியில்) பதவி உறுதி எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'இந்தி மொழியில் மட்டுமே, பதவி உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்' என்று மகாபாலிகா (நகராட்சிமன்ற) சட்டத்தில் இருக்கும் விதியைச் சுட்டிக்காட்டி, 'இந்தியிலேயே அனைவரும் பதவி உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று நகராட்சி மேயர் வற்புறுத்தியும், இவர்களில் யாரும் அதனை ஏற்கவில்லை!

ஒரு சாதாரண நகராட்சியில்—அதுவும் இந்திக்குத் தாயகமாக விளங்கும் உ.பி. மாநிலத்தில்—எல்லோரும் ஏற்கும் மொழியாக நுழைய முடியாத இந்தியைத்தான் இந்தியா முழுவதற்கும் ஆட்சிமொழியாக திணித்துவிட வேண்டும் என்று இந்தி வெறியர்களும், இந்திய அரசினரும், துடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

## ஆட்களின்றி நடத்தப்பட்ட விருந்து!

### அதிகாரிகள் 12 பேர் குடும்பத்துடன் விமானத்தில் வந்த 'கூத்து'!

### மத்திய அரசின் உர நிறுவனம் புரிந்த ஊதாரிச் செலவுகள்

நாடாளுமன்றத்தில் சரமாரியான கேள்விகள்—
விசாரிப்பதாக அமைச்சர் உறுதிமொழி

புதுடில்லி, ஜூலை 22—

"மிகப் பெரிய அரசு நிறுவனங்களில் ஒன்றான திருவாங்கூர் உரத் தொழிற்சாலை (FACT) அதிகாரிகள் செய்ததாகக் கூறப்படும் ஊதாரிச் செலவுகள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்படும்"

என்று அமைச்சர் அசோக் மேத்தா, நாடாளுமன்றத்தில் உறுதி கூறினார்.

மக்களவையில் ஏ. சீதரன், இலக்கப்பா, மற்றும் பல உறுப்பினர் எழுப்பிய சரமாரியான கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

உறுப்பினர்கள் மிகவும் உணர்ச்சிவயப்பட்டிருந்தனர்.

"தேவைப்பட்டால விசாரணை மேற்கொள்ளுவதற்காகக் குழு ஒன்றை அமைக்கவும் தயாராக இருக்கிறேன்" என அமைச்சர் தெரிவித்தார்.

"உரிய நேரத்தில் பலமுறை மீண்டும் மீண்டும் குற்றச்சாட்டுக்கள் எடுத்துக்காட்டப்பட்டிருந்தும், தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு தவறிவிட்டது" என மேற்கண்ட உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

திரு. சீதரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஐ நா. பிரதிநிதிகட்கு (அன்க்டாட்) மேற்படி நிறுவனம் ஒரு விருந்து நடத்தியது; அதில் எந்த நபரும் கலந்துகொள்ளவில்லை.

"இந்த விருந்தில் கலந்துகொள்ளும் பொருட்டு, கம்பெனியின் 12-பெரிய அதிகாரிகள் தத்தம் மனைவியருடன் டெல்லிக்கு வந்தனர்; இதற்கான செலவு கம்பெனிக் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறது.

"விளம்பரத்துக்காகவும், பொழுதுபோக்குக்காகவும் கம்பெனி செலவிட்டிருக்கும் தொகைகள்பற்றி ஒரு விசாரணை நடத்தவேண்டியது அவசியமாகும்."

இதற்குமுன், துணையமைச்சர் இரகுராமையா பதில் கூறுகையில குறிப்பிட்டதாவது:—

"மேற்படி விருந்து பற்றி அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது; குற்றச்சாட்டுகளை அதிகாரிகள் மறுத்துள்ளனர்; எனினும், இது பற்றி மேலும் ஆராய்வோம்."

# பொறியர்கட்குப் புதிய வேலைவாய்ப்பு

## சொந்தத்தில் தொழில் துவக்க அரசு ஊக்கமளிப்பு

மதுரை, ஜூலை 21—

"சிறு தொழில்களைத் துவக்குவது தொடர்பாக, பொறியியல் பட்டதாரிகட்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

"வேலையில்லாமல் உள்ள பொறியர்கட்குப் புதிய வாய்ப்புக்களை அளிப்பதற்காகத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் ஒன்ருகும் இது.

"சில பொறியர்களே சொந்தமாகத் தொழில் நடத்த முன் வந்துள்ளனர். அவர்களின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு வருகின்றன"

என்று தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், மேலும் அவர் கூறியதாவது :—

"தொழில்களைத் தேர்ந்தெடுத்து அதனைச் சொந்தமாகத் துவக்குவதில் புதிய பொறியர்கட்கு வழிகாட்டுவதற்காகக் கிண்டி பொறியியல் கல்லூரியில் இரண்டு மாத வகுப்பு ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது; இதில் 50 பேர் சேர்ந்துள்ளனர்."

# இங்கு ஓர் அமைச்சர்— அங்கு ஓர் அமைச்சர் ஏன்?

சென்னை, ஜூலை 22—

"கல்வித்துறை மாநில அரசுக்குரியது என்று அரசியல் சட்டத்திலேயே வரையறுக்கப்பட்டிருந்தும்கூட, கல்விக் கொள்கை — திட்டங்களை வகுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு ஏன் இருக்கவேண்டும்? மத்திய அரசில் கல்வியமைச்சர் என்ற ஒருவர் ஏன்? அவர் என்ன சொல்கிருர் என்று பார்த்துக்கொண்டேயிருந்தால் மாநிலத்திற்குரிய சுய ஆட்சி என்ன ஆவது?

"அதேபோலத்தான், தொழில் துறை மாநில அரசுக்கும்— அதற்கு லைசென்சு வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்கும் இருக்கிறது.

"போக்குவரத்து, சுகாதாரம் போன்ற துறைகளும் இந்த நிலையில்தான் இருக்கின்றன.

"மாநில சுயாட்சி தேவை என்பதன் அடிப்படையில்தான் இன்று இப்பிரச்சினை எழுந்துள்ளது. இது ஓர் அரசியல் கட்சியின் பிரச்சினையல்ல— அனைத்துக் கட்சிகளுக்கும் உரிய பிரச்சினையாகும்."

**—அறிஞர் அண்ணா**

(மாநில சுயாட்சிக் கருத்தரங்கில்)

ஆணவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு!

# காமராசர்-சுப்பிரமணியம் கூற்று எந்த நியாயத்தின்பாற்பட்டது?

## 'நாட்டின் மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை' என்பது பொருளற்றது — பொருத்தமற்றது !

"'மாநில சுயாட்சி வேண்டும்' என்று நாம் கேட்கிறபோது, காமராசரும் சுப்பிரமணியமும், 'இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும்; நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும்' என்று கருதுகின்றனர்.

"நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும், நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும், வழிகாட்டும் திறமையும் அவர்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிடும் முழு உரிமை, யாரால் — எந்தக் காரணத்தால் — எப்போது அவர்களுக்கு அளிக்கப்பட்டது?

"குழந்தை தெருவில் சென்ருல், 'கார் வந்து மோதிவிடும்; அதற்கு ஆபத்து வரும்' என்று உணர்ந்து, அந்தக் குழந்தையைக் காப்பாற்றிட எல்லோருக்கும் உரிமையுண்டு — தேவையும் உண்டு.

"ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும், அவர்கள் தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர்கள் போலவும் பேசுவது ஏன்?

"காங்கிரசுத் தலைவர்கள் இப்படிப் பேசுவது, 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்டுவிட்ட தவருக இருக்கலாம்; இருபது ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால், 'சரி' என்றுகூட ஏற்றுக்கொண்டிருக்கலாம்; ஆனல், விழிப்படைந்த இந்தக் காலத்தில்கூட அப்படிப் பேசுவது, 'ஆணவத்திற்கு எடுத்துக்காட்டு' என்றுதான் உலகம் கருதும்!

"நாட்டுக்கு ஆபத்து என்பதை உணரும் சக்தி, எங்களைவிட சுப்பிரமணியத்துக்குத்தான் உண்டு எனக் கூறுவது, எந்த நியாயத்தின் அடிப்படையில் எழுந்தது?

"நாட்டைக் கட்டிக்காப்பதில் ம. பொ. சிவஞானத்திற்கு உள்ள உறுதியைவிட, காமராசருக்கு (இருப்பதாகச் சொல்லப்படும்) உறுதி அதிகம் என்பது எந்த நியாயத்தின்பாற்பட்டது?

"காங்கிரசுக்காரர்களைத் தவிர நாட்டின்மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது, பொருளற்றது – பொருத்தமற்றது – ஒதுக்கித்தள்ளப்பட வேண்டியது!"

**—அறிஞர் அண்ணா**

(மாநில சுயாட்சிக் கருத்தரங்கில்)

# மேட்டூர்ப் பாசனம் தொடங்கிவிட்டது

## தஞ்சை மாவட்ட விவசாயிகள் சுறுசுறுப்பு

### சாகுபடியாளர்கட்கு விவசாய அதிகாரிகள் அறிவுறுத்தல்

தஞ்சாவூர், ஜூலை 22—

தஞ்சை மாவட்டத்தில் மேட்டூர் நீர், வயல்களுக்குப் பாயத் தொடங்கிவிட்டது. அவரவரும் தங்கள் நிலங்களுக்கு நீர்ப் பாய்ச்சி விதை விடுவதற்கான நாற்றங்காலைப் பக்குவப்படுத்துவதில் முனைந்துள்ளனர்.

எனினும், ஆகஸ்டு 7-ம் நாள் வரையில் பொறுத்திருக்குமாறு சாகுபடியாளர்களுக்கு வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

மேட்டூர்த் தேக்கத்துக்குப் பெரும் அளவில் தண்ணீர் வந்து கொண்டிருந்தபோதிலும், இன்னும் கொள்ளளவை எட்டவில்லை; மேட்டூர் அணை நிரம்பினல்தான் போதுமான அளவுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும்.

நீண்டகாலப் பயிரான 'கோ-25' விதையை ஆகஸ்டு 25-ம் நாளுக்குப் பிறகு தெளிக்கவேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது; ஏனெனில், பிறகு அறுவடைக்குச் சற்று முன்னதாக — அதாவது சனவரி — பிப்ரவரியில் மேட்டூரில் தண்ணீர் குறைந்துவிடக்கூடும். சடந்த ஆண்டில் இந்தப் பயிர், போதிய தண்ணீர் இல்லாமல் பிப்ரவரி — மார்ச்சு மாதங்களில் வாடியது நினைவிருக்கலாம்.

மேட்டூர் அணைக்கு 35,000 முதல் 48,000 கியூசெக்ஸ் வரை தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. மேலும் காவிரித் தலைப்பான மெர்க்காரா பகுதியில் மழை பெய்வதால், மேலும் தண்ணீர் வருவதற்கான நம்பிக்கை உள்ளது.

மேட்டூரிலிருந்து 30,000 கியூசெக்ஸ் வீதம் தண்ணீரை விட ஏற்பாடாகியுள்ளது.

# நாவன்மையே நமது சொத்து!

## மக்களை நம்பியே கழகம் வளர்ந்தது

### அண்ணாவின் கண்ணியம் நாட்டையே ஈர்த்தது

சென்னை, ஜூலை 20—

"தி.மு. கழகத்திற்குள்ள ஒரே சொத்து நாவன்மை ஒன்றுதான்! கண்ணீரும் கம்பலையுமாக இராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் கழகம் ஆரம்பிக்கப்பட்டது! மிக மிகச் சாதாரணமானவர்களை வைத்துக்கொண்டு இந்த அளவுக்குக் கழகம் வளர்ந்துள்ளது என்றல் அதற்குக் காரணம், அண்ணா அவர்களின் தனிப்பட்ட ஆற்றல்தான்!

"தனிப்பட்ட பணக்காரர் எவரிடமும் போய்விடாமல் — எவர் தயவிலும் சழகம் வாழாமல் — பொதுமக்களையே நம்பி கட்சியை வளர்த்தவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தவிர வேறு யாருமிலர்!

"காங்கிரசு வீழ்ந்ததற்குக் காரணமே, அது தொண்டர்களை விட்டுப் பணக்காரர்களிடம் போனதுதான்! அப்படிக் கழகம் போகக்கூடாது என்றுதான், சிறப்புக் கூட்டங்கள் - நாடகங்கள் நடத்துகிறேம்! ரூ. 50 ஆயிரம் மதிப்பில் 'அறிவகம்' இருக்கிறதென்றல் யாரும் தனிப்பட்ட முறையில் கொடுத்ததல்ல அது! மக்கள் ஒவ்வொருவரும் நாலணா, எட்டணாவாகக் கொடுத்த பணம்!

"'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்' என்று வள்ளுவர் கூறினர். அந்த ஆற்றல் அண்ணாவிடம் உள்ளதால்தான், நாடு அவரை நாடி வந்தது!

"பொதுத் தேர்தலுக்கு முன்பு நம்மை எந்த அளவுக்கு ஏச முடியுமோ அந்த அளவுக்கு ஏசிய பெரியார், இன்று அண்ணாவுக்குப் பொன்னாடை போர்த்தும் அளவுக்கு வந்திருக்கிருர் என்றல் இது சாதாரண மாற்றமா? இதற்குக் காரணம் அண்ணா அவர்களின் கண்ணியம்தான்!

"முன்பு சென்னை மாநகராட்சி மன்றம் அண்ணா அவர்களுக்குச் சிலை வைக்க வேண்டுமென்று சொன்னபோது 'எனக்கு வேண்டாம்; காமராசருக்கு வையுங்கள்' என்றர் அண்ணா! அதேபோல், அப்போழுதிருந்த மேயர் முனுசாமி தலைமையில் நேரு அவர்கள் காமராசர் சிலையைத் திறந்துவைத்தார்! இத்தகைய அண்ணாவின் கண்ணியம் எங்கே? 'அண்ணாவுக்கு அறிவுண்டா?' என்று கேட்கும் காங்கிரசாரின் கண்ணியம் எங்கே?"

**—அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்**

(சென்னை 70-வது வட்டக் கூட்டத்தில்)

# அரசியல் புரிந்தவர்கள் விலா நோகச் சிரிப்பார்கள் !

"எந்த ஒரு திட்டத்தில் — எந்த ஒரு தத்துவத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அதற்காகக் கோரிக்கை வைக்க வேண்டும் — கிளர்ச்சி நடத்த வேண்டும்; வீம்புக்காகக் கோரிக்கை வைப்பது — கிளர்ச்சி நடத்துவது என்பது, பொருளற்றதும் பொதுமக்கள் வெறுக்கததககதும் ஆகும்!

"நாங்கள், 'இந்தி வரக்கூடாது' என்ற கோரிக்கையை வைத்தோம் — கிளர்ச்சி நடத்தினேம் என்றல், அந்தக் கோரிக்கையில் எங்களுக்கு நம்பிக்கை இருந்தது; 'இந்தி வந்தால் தாய்மொழி கெடும்; தமிழ் இனம் கெடும்' என உளமார நம்பினேம்; கோரிக்கையை முன்வைத்தோம் — கிளர்ச்சி நடத்தினேம்!

"அதுபோல், 'விலைவாசி குறையவேண்டும்; அப்போதுதான் ஏழைகள் சுபீட்சமாக வாழ முடியும்' என்று உளமாரக் கருதினேம்; அக்கோரிக்கையை முன்வைத்தோம் — கிளர்ச்சி நடத்தினேம்; அறிஞர் அண்ணா அவர்கள் முதற்கொண்டு கழக முன்னணியினரும் கழகத் தொண்டர்களும் சிறை சென்றனர்!

"அதுபோல், படி அரிசி கேட்டு கிளர்ச்சி நடத்தும் காங்கிரசுக் காரர்களுக்குப் படி அரிசி திட்டத்தில் நம்பிக்கை உண்டா?— இல்லை; படி அரிசித் திட்டத்தைக் கேலி புரிந்தவர்கள் அவர்கள்! 'வளரும் பொருளாதாரத்தில் விலைவாசி ஏறத்தான் செய்யும்; படி அரிசித் திட்டம் என்பது ஒவ்வாத திட்டம்' என்று பேசியவர்கள் அவர்கள்! சுருக்கமாகச் சொன்னல், படி அரிசித் தத்துவத்தின் விரோதிகள் அவர்கள்!

"பதவி பறிபோனதால் ஏற்பட்ட எரிச்சல் காரணமாக, இப்போது, 'படி அரிசி வேண்டும்' என்று கோரிக்கை வைத்தால் — கிளர்ச்சி நடத்தினல் அரசியல் புரிந்தவர்கள் விலா நோகச் சிரிப்பார்கள்!"

**—அமைச்சர் மு. கருணாநிதி**

(தியாகராயர்நகர் கூட்டத்தில்)

# என். சி. சி. படையின் எதிர்காலம்?

## தமிழக அரசு முடிவு செய்யவில்லை

மதுரை, ஜூலை 21—

"தமிழகத்தில் மீண்டும் தேசிய மாணவர் படையைத் (என்.சி.சி.) துவக்குவதுபற்றி இன்னும் எந்த முடிவும் செய்யப்படவில்லை"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

"என். சி. சி. அதிகாரிகள் இதுபற்றி முதலமைச்சர் அண்ணா அவர்களுடன் இதுவரை கலந்து பேசவில்லை; என். சி. சி. பயிற்சியில் ஆங்கிலத்திலேயே கட்டளைச் சொற்கள் இருக்கவேண்டும் என்ற தமிழக அரசின் நிலை மிகத் தெளிவாக உள்ளது"

என்றும் அமைச்சர் மேலும் விளக்கினர்.

# வாக்காளர் பட்டியல்

## சென்னை 33-வது வட்டத்தினர் கவனிக்க :

சென்னை 33-வது வட்டத்துக்கான மாநகராட்சி வாக்காளர் பட்டியல், ஜூனி அவதானம் பாப்பையர் தெரு, 44-எண்ணுள்ள பேராசிரியர் அன்பழகன் படிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பார்வையிட்டு, 27—7—68-க்குள், விடுபட்ட பெயர்களைச் சேர்க்கவோ, பிழைகளைத் திருத்தவோ மனுச் செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

# எந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கும்?

## மாணவர்கட்கு உதவ அரசு ஏற்பாடு

மதுரை, ஜூலை 22—

"எந்தெந்தக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் இன்னும் எத்தனை இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதை அறிவிக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது; இதன்மூலம், இதுவரை இடம் கிடைக்காமல் இருக்கும் மாணவர்கள் பயனடையக் கூடும்"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"தமிழகக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் மொத்தம் 56,000 இடங்கள் உள்ளன; அவற்றில் 48,000 இடங்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டவை; மற்றவை, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவையாகும்.

"தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட வகுப்புகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் சேர்ந்து வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன."

நாடகாசிரியர்

# சங்கரதாஸ் சுவாமிகட்கு சிலை

## மதுரையில் அண்ணா திறந்து வைக்கிறார்

தமிழ் நாடக மேதை சங்கரதாஸ் சுவாமிகளின் 101-வது பிறந்த நாள் விழா, இவ்வாண்டு செப். 7-ஆம் நாள் வருகிறது.

இவ்விழாவினையொட்டி, மதுரை தமுக்கம் சங்கரதாஸ் கலை அரங்கில் செப்டம்பர் 6, 7, 8-ஆகிய நாட்களில் ஒரு பெரும் நாடகக் கலை விழா நடைபெற இருக்கிறது.

6—9—68-ல், தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், சுவாமிகளின் உருவச் சிலையினைத் திறந்துவைக்கவும், ம. பொ. சிவஞானம் விழாவுக்குத் தலைமைதாங்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அன்று, சுவாமிகளின் நினைவாகத் தமிழ் நாடக ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் நிகழ்த்த மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களிடம், நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் விழாக் குழுத் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்களால் ரூ. 7,000 'வைப்பு நிதியாக' வழங்கப்படும்.

7—9—68 அன்று முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில், நாடகப் பேராசிரியர்கள் பம்மல் சம்பந்தனார், மனோன்மணியம் சுந்தரனார், பரிதிமாற் கலைஞர் உடுமலை முத்துசாமி கவிராயர், சதாவதானம் கிருஷ்ண சாமிப் பாவலர், கந்தசாமி முதலியார், மதுரை பாஸ்கர தாஸ் ஆகியோரின் உருவப் படங்கள் திறந்து வைக்கப்படும்.

'தமிழவேள்' திரு. பி. டி. இராசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழாக் குழு சார்பில், மதுரை நகர சபையின் முழு ஆதரவோடு இக்கலை விழா நடைபெறுகிறது. விழாவினை சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தார் பொறுப்பேற்று நடத்துகின்றனர்.

சுவாமிகளின் உருவச் சிலை, குமரி மாவட்டத்தைச் சேர்ந்த மயிலாடியில் செய்யப்பட்டு வருகிறது; இச்சிலை, மதுரை தமுக்கம் சங்கரதாஸ் கலையரங்கு அருகில் மதுரை அழகர்கோயில் நெடுஞ் சாலையில் திறந்து வைக்கப்படும்.

8—9—68-ல் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் ஒரு நாடகக் கருத்தரங்கு நடைபெறும்; திரு. சி. சுப்பிரமணியம் கருத்தரங்கினைத் தொடங்கிவைப்பார். பிரபல நாடக ஆசிரியர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு, பல்வேறு தலைப்புகளில் தங்கள் நாடக ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பார்கள்.

மூன்று நாட்களும் இரவு 9-மணிக்குமேல் இசை—நாடக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு நாடக நடிகர் சங்கம், மதுரை நடிகர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த நடிக—நடிகையர் இவ்விழாவில் கலந்துகொண்டு சொந்தக் குரலில் சுவாமிகளின் நாடகங்களைப் பாடி நடிப்பார்கள்.

## திருச்சியில் தீ விபத்து

### பாதிக்கப்பட்டவர்களுக்குக் கழகத் தோழர் உதவி

14—7—68 பிற்பகல் 1-மணியளவில் திருச்சி பெரியார் நகரில் தீப்பிடித்துக்கொண்டது.

கழகத் தோழர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து உதவினர்.

கழகத் தோழர்கள் கேட்டுக்கொண்டதன்மீது 'யங் இந்தியா பிஸ்கட்ஸ்' கம்பெனியார் 650 ரொட்டிகள் கொடுத்து உதவினர்.

## சென்னை 45-வது வட்ட கருணாநிதி மன்றம்

சென்னை 45-வது வட்டம் கலைஞர் கருணாநிதி மன்றத்திற்கு 1968-69 ஆண்டுக்கான நிர்வாகிகள், தேர்தல், வட்ட தி. மு. க. அவைத் தலைவர் அ. சண்முகம் அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெற்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர்: இரா. அரிகரன்; துணைத் தலைவர்: இரா. எத்திராசன்; செயலாளர்: ம. கண்ணதாசன்; துணைச் செயலாளர்: சே. முருகேசன்; பொருளாளர்: கோவிந்தராசன்.

செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர்.

## கூட்டுறவு பாங்கித் தேர்தல்

### கழகத் தோழர்கள் வெற்றி

கடந்த 22—6—'68-ல் நடைபெற்ற வேலூர் (சேலம்) கூட்டுறவு நகர பாங்கியின் மூன்று இயக்குநர்களுக்கான தேர்தலில் கழகத் தோழர்கள் இராசு (என்கிற) ஆறுமுகம், பழனி, வி. ஏ. இலக்குமணன் ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர்.

எதிர்த்துக் காங்கிரசு சார்பில் நிறுத்தப்பட்டுப் போட்டியிட்ட ஒருவரும், கம்யூனிஸ்டுச் சார்பில் நிறுத்தப்பட்ட ஒருவரும், மற்றொருவரும் இணைந்து, கழகத் தோழர்கள் மூவரையும் எதிர்த்து வேலை செய்தும்கூட மேற்கண்ட மூவரும் மாபெரும் வெற்றிபெற்றனர்,

### கழகத் தேர்தல்:

# வட்டக் கழகம்

### வட்டத் தகுதி படைத்த

# பெருநகரக் கழகம்

### ஆகியவைகளின் தேர்தலில் போட்டியிட விரும்பும்

# வேட்பாளர்களுக்கு விளக்கம்

1. வட்டக் கழகம்—வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகம் ஆகிய அமைப்புக்களின் பொறுப்புக்கள் (பதவிகள்) என்பன:—
   - (அ) அவைத் தலைவர்
   - (ஆ) செயலாளர்
   - (இ) துணைச் செயலாளர்
   - (ஈ) பொருளாளர்
   - (எ) மாவட்டப் பிரதிநிதிகள்
   - (ஏ) செயற்குழு உறுப்பினர்கள்
2. மேற்குறிப்பிட்ட வரிசைப்படியே தேர்தல்கள் நடைபெறும். ஒவ்வொரு பொறுப்புக்கான தேர்தல் முடிந்ததும், ஆணையாளரால் முறைப்படி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்ட பிறகே அடுத்த பொறுப்புக்கான தேர்தலை ஆணையாளர் நடத்துவார்.
3. மேற்கண்ட பொறுப்புக்களுக்குப் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள், கழகத்தில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.
4. ஒவ்வொரு பொறுப்புக்கான தேர்தல் நடைபெறும்விவரத்தை—அதாவது, வேட்பாளர் பட்டியலை—ஆணையாளர் அறிவிக்கும்போது போட்டியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், உடனே எழுத்துமூலமாக ஆணையாளரிடம், தாம் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் மடலைத் தரலாம்; அதற்கேற்ப ஆணையாளர், போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் வேட்பாளரின் பெயரை வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு, முடிவான பட்டியலை அறிவிப்பார். அவ்வாறு போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் வேட்பாளருக்குரிய கட்டணத்தைத் தலைமைக் கழகத்தால் அந்த வேட்பாளருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.
5. தலைமைக் கழகத்தால் பரிசீலனை செய்யப்பட்டு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் ஆணையாளரிடம் சேர்ப்பிக்கப்படும். அந்த வேட்பாளர்களைத் தவிர வேறு யாரிடமிருந்தும் எந்த ஒரு பொறுப்புக்கும் தேர்தல் நாளன்று வேட்பாளர் விண்ணப்பத் தாள்களை ஆணையாளர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.
6. 24—7—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேருமாறு வேட்பாளர்கள், தங்களின் விண்ணப்பத் தாள்களை முறைப்படி நிறைவு செய்து கட்டணத் தொகையுடன் அனுப்பிவைக்க வேண்டும்.
7. ஒருவர் எத்தனைப் பொறுப்புக்களுக்கு விரும்பினாலும் போட்டியிடலாம். அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர், அந்தந்தப் பொறுப்புக்குத் தனித்தனியான விண்ணப்பத் தாளில் தனித்தனியான கட்டணத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.
8. வேட்பாளர்களின் விண்ணப்பத் தாள்கள் தலைமைக் கழகத்தால் சூலை 26, 27 ஆகிய நாட்களில் பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளர்களின் பட்டியல் அறிவிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத விண்ணப்பங்களுக்குரிய வேட்பாளர்களுக்கு, அதற்குரிய விளக்கம் அறிவிக்கப்படும். பரிசீலனையின்போது உடன் இருக்க விரும்பும் வேட்பாளர்கள், தங்கள் தங்கள் பொறுப்பில் தலைமைக் கழகத்திற்கு நேரிலும் வரலாம்.

மற்ற விவரங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.

—தலைமை கழகம் (தி. மு. க.)

## தொழிலாளர்கட்கான இன்சூரன்சுத் திட்டம்

### தமிழகத்தில் 31 இடங்களில் அமுலாகும் விவரம்

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சுத் திட்டம், தமிழ்நாட்டில் 31 இடங்களில் செயல்படுத்தப்படுகிறது. நோயாலும், விபத்தாலும் பாதிக்கப்பட்டதொழிலாளர்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுகின்றனர். பேறுகால உதவியும் பெண் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தால் 2,99,181 தொழிலாளர்கள் பாதுகாப்புப் பெற்றுள்ளனர். ரொக்க உதவியைப் பட்டுவாடா செய்வதற்காக மாநிலத்தில் 54 அலுவலகங்கள் இயங்கிவருகின்றன.

1968 ஏப்ரல் மாதத்தில் 2,024 தொழிலாளர்களுக்கு விபத்துக் காரணமாக ரூ. 1,34,364.48 ரொக்க உதவி அளிக்கப்பட்டது. நிரந்தரமாக ஊனமடைந்து பென்ஷன் வழங்கப்பட்ட 430 பேர்களும், இறந்துபோன இன்சூர் நபர்களைச் சார்ந்த 175 பேர்களும் உதவி பெற்றவர்களில் அடங்குவர்.

இந்த மாதத்தில் 2,110 விபத்துக்கள் ஏற்பட்டன. தொழில் செய்யும்போது காயமடைந்ததால் உதவி கேட்பவர்கள் குறைவாகவும், நோயுற்றதால் ரொக்க உதவி கேட்பவர்கள் அதிகமாகவும் இருந்தார்கள்.

இந்த மாதத்தில் 49,420 கோரிக்கைகள் வந்தன. மருத்துவ உதவித் தொகையாக ரூ. 10,16 239.68 அளிக்கப்பட்டது. வேலைக்கு வராத நாட்களின் எண்ணிக்கை 2,87,488.

142 பெண் தொழிலாளர்கள் ரூ. 48,760 31 பேறுகால உதவி பெற்றனர்.

தொழிலதிபர்கள் ரூ. 26,766.83 பங்குத் தொகை செலுத்தாததற்காக 24 வழக்குகளில் சட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டன.

## இளமுருகு பொற்செல்வி உடல்நிலை

### மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்

சென்னை, சூலை 20—

கார் விபத்துக்காளாகி சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த திரு மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள், இன்று மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்.

கடந்த 25—5—68 அன்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட திரு. இளமுருகு, இது நாள்வரை மருத்துவமனையிலேயே தங்கிச் சிகிச்சை பெற்றுவந்தார்.

வலது கை எலும்பு முறிவுற்ற அவருக்கு, சிகிச்சையின் பயனாக ஓரளவு கை சீர்பெற்றிருக்கிறது என்றாலும், சரிவரக் கையைப் பயன்படுத்த முடியவில்லை; இன்னும் சிறிது வீக்கம் இருந்துவருகிறது.

மூக்கிலும், நெற்றியிலும் ஏற்பட்ட காயம் தையல் போடப்பட்டு ஆற்றியுள்ளது.

மருத்துவமனையிலிருந்து வெளியேறியபோதிலும், இன்னும் உடல்நிலை முழு நலம் பெறவில்லை; சில திங்கள் முழு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்துவருகிறார்.

திரு. இளமுருகு அவர்களை, அவரது துணைவியார் திருமதி பொற்செல்வி அவர்களும், மற்றும் நண்பர்களும் இன்றிரவு இரயில்மூலம் குளித்தலைக்கு அழைத்துச் சென்றனர்.

## சீரணிப் பணி

பரங்கிப்பேட்டை ஒன்றிப்பைச் சேர்ந்த கிள்ளை ஊராட்சி மன்ற எல்லையிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு கிள்ளை சீரணித் தொண்டர்களால் வெள்ளை அடிக்கப்பட்டது.

## இந்தியத் துணைக்கண்டம் வலிமை பெற....

# தகுதி வாய்ந்த தலைமை தேவை

'ஒரு நாடு இன்னொரு நாட்டை மதிக்கிறதென்றால், அதன் பரப்பளவை வைத்து மதித்து விடாது; மக்கள் தொகையை வைத்து எடைபோட்டு விடாது; யார் தாக்கினாலும்—அமெரிக்கா தாக்கினாலும் சீனா தாக்கினாலும்—வல்லரசுகள் என்று பெயரெடுத்த எந்த நாடுகள் தாக்கினாலும்—தனியாக நின்று எதிர்க்கும் ஆற்றல் எந்த நாட்டுக்கு இருக்கிறதோ அந்த நாட்டைத்தான் இன்னொரு நாடு மதிக்கும்!

"சின்னஞ்சிறு நாடுகளான சுவிட்சர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்குப் பொருளாதாரத் துறையில் முன்னேறித் தனித்து நிற்கின்றன; ஆனால் இந்தியாவோ—இரஷ்யாவைப் பார்க்கும்போது அதனிடம் கைநீட்டுகிறது; அமெரிக்காவைப் பார்க்கும்போது அதனிடம் கைநீட்டுகிறது.

'இந்தியப் பேரரசுக்குச் சொல்லிக் கொள்வோம்—'உங்களை நீ பலப்படுத்திக் கொள்ளுங்கள்; தன் காலில் நிற்கும் வலிமையை நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்; ஒருமைப்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; இராஜபுதனப் பாலைவனம் முதல் அசாம் காடு வரை—குமரி முதல் இமயப் பனிமலைப் பிரதேசம் வரை—ஒரு கலாச்சாரத்தை—ஒரு பாரம்பரியத்தை உருவாக்குங்கள்; அப்படி உருவாக்கப்பட்ட இந்தியா, எந்த மாஸ்கோ எதிர்த்தாலும் சரி—பீகிங் எதிர்த்தாலும் சரி—தனியாகவே நின்று சமாளிக்கும்' என்று!

"இந்தியத் துணைக் கண்டத்தின் வெளிவிவகாரக் கொள்கையை, பலம் வாய்ந்த கொள்கையாக ஏற்படுத்த அவர்களால் முடியவில்லை!

"இந்த நிலையில், இந்தியத் துணைக் கண்டத்தை நடத்திச் செல்லத் தகுதிவாய்ந்த தலைமை தேவை; அந்தத் தலைமை காங்கிரசால் கிடைக்காது!"

—கி. மனோகரன்

(சென்னை 58-வது வட்டக் கூட்டத்தில்)

## பாட மொழியல்ல—பாடமே முக்கியம்!

### கல்வி அமைச்சர் விளக்கம்

சென்னை, சூலை 21—

"ஒரு மாணவர் எந்த மொழியில் தம் பாடங்களைப் படித்தார் என்பது முக்கியமல்ல; படித்த பாடங்களைப் பற்றி நன்றாக அறிந்திருக்கிறாரா என்பதே பேட்டியின்போது கவனிக்கப்படும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"ஆங்கிலக் கல்வியை சிறப்பாக மாணவர்கட்கு அளிப்பதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஆங்கிலம் கற்பிப்பதற்காக அதிகப்படியான நேரம் ஒதுக்கும்படியும் கல்லூரி முதல்வர்கட்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவையானால் தானும் இத்துறையில் உதவுவதாக பிரிட்டிஷ் கௌன்சில் அறிவித்துள்ளது."

# பிரிட்டனிலிருந்தும் பாகிஸ்தானுக்கு ஆயுதம்!

## பேச்சு நடத்தச் சென்றிருக்கிருர் அயூப்கான்!

### நீர்மூழ்கி மற்றும் கப்பற்படைத் தளவாடங்கள் பெற முயற்சி

இலண்டன், சூலை 22—

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், இலண்டனில் பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சனுடன் பேச்சுவார்த்தை நடத்துகையில், நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்படப் போர்த் தளவாடங்கள் பலவும் வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்புவார் என்று தெரியவருகிறது.

பத்து நாட்கள் தங்கும் பொருட்டு இன்று மாலை இங்கு வந்து சேர்ந்த அயூப்கான், மருத்துவப் பரிசோதனைக்காகவே வந்திருக்கிருர் என்ருலு, இங்கு தங்கும் நாட்களில் தமது நாட்டுப் பிரச்சினைகள் பற்றி விவாதிப்பார் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 1965-ல் இந்தியாவுடன் நடந்த போரில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு, கிடைக்குமிடங்களிலிருந்தெல்லாம் ஆயுதங்கள் வாங்குவது என்ற பாகிஸ்தானின் கொள்கையின்படியே இப்பொழுது பிரிட்டனிடமும் ஆயுதங்கள் கேட்பதற்கு முயற்சிக்கப்படுகிறது.

உலகில் பெரிய அளவில் போர் ஆயுத உற்பத்தி செய்து கொண்டுவரும் எல்லா நாடுகளிடமும் பாகிஸ்தான் ஆயுதங்கள் பெற்றுக்கொண்டு வருகிறது.

1950—1965-க்கிடையே தனது இராணுவக் கூட்டாளியான அமெரிக்காவின் ஆயுதங்களையே முழுமையிலும் நம்பியிருந்த பாகிஸ்தானின் இராணுவத்தில் பிரிட்டிஷ் ஆயுதங்களும ஓரளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

பாகிஸ்தான், அமெரிக்காவிலிருந்து நீர்மூழ்கிக் கப்பலை வாங்கியிருப்பினும், கடற்படை, பிரிட்டனை நம்பியிருக்கும் நிலையே உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, இந்தியாவுக்கும் - இரஷ்யாவுக்கும் இடையில் கடற்படை சம்பந்தமாக ஓர் இரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகப் பாகிஸ்தான் ஏஜெண்டுகளால் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டு வந்துள்ளன.

இதைக் காட்டி, தனக்குக் கடற்படைத் தளவாடங்கள் — குறிப்பாக நீர்மூழ்கிக் கப்பல்கள் வேண்டுமென்று அயூப்கான் கோரிக்கை எழுப்புவார் எனக் கூறப்படுகிறது.

## உடல் பரிசோதனைக்கே ரஷ்யா செல்கிருராம்

### அயூப்கான்பற்றி டெல்லிக்குக் கிடைத்த தகவல்

புதுடில்லி, சூலை 22—

பிரிட்டிஷ் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, இரஷ்யா செல்லவிருக்கும் அதிபர் அயூப்கான், தமது உடல்நிலை பற்றிச் சோதனை செய்வதற்காகவே அங்கு செல்கிருர் என்று டெல்லிக்குக் கிடைத்த செய்திகள் கூறுகின்றனவாம்.

இரஷ்ய டாக்டர்களுடன் உடல்நிலை பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று அயூப்கானே விருப்பம் தெரிவித்திருக்கிருராம்.

இதற்குப் பிறகே, இரஷ்யா, அவசர அவசரமாக அயூப்கானுக்கு அழைப்பு அனுப்பியதாம்.

## டில்லி அமைச்சர்கள் பெற்ற அந்நியச் செலாவணி

### வெளிநாட்டில் சொந்தச் செலவு

புதுடில்லி, சூலை 22—

"தலைமயமைச்சர் இந்திரா உட்பட 8 மத்திய அமைச்சர்கள் இந்த ஆண்டு மே-சூன் மாதங்களில் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்தபோது அவர்களது சொந்தச் செலவுக்காக மொத்தம் ரூ. 3,15,475 அந்நியச் செலாவணி அனுமதிக்கப்பட்டது"

என்று துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, வர்த்தக அமைச்சர் திணேஷ்சிங், கல்வி அமைச்சர் கிரிகுண சென். ஆகியோா தலா ரூ 378-ம் பொதுநல அமைச்சர் சத்தியநாராயணசின்கா ரூ 425-ம் வித்யாசரண்சுகலா ரூ. 393 75-ம் டாக்டர் கே. எல். ராவ் ரூ. 315-ம் செலவழித்தார்களாம்.

# சேதுசமுத்திரத் திட்ட அறிக்கை

## அண்ணு--கருணாநிதியிடம் நகல் தாக்கல்

### நான்காம் திட்டத்தில் சேர்க்கத் தமிழக அரசு முயற்சி

சென்னை, சூலை, 22—

சேதுசமுத்திரத் திட்டம் குறித்து ஆய்வு நடத்திய தலைமைப் பொறியாளர் வெங்கடேசுவரன் முதலமைச்சர் அண்ணு அவர்களிடமும், பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களிடமும் அதனுடைய அறிக்கையின் நகல் ஒன்றை அளித்தார்.

ஏற்கனவே அவ்வறிக்கையை, மத்திய அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களிடம் சேர்ப்பித்தது நினைவிருக்கலாம்.

மூன்ருண்டுக்காலமாக நடத்திய நுண்ணிய ஆய்வின் மூலம் இத்திட்டம், முழு வடிவம் பெற்று செயலாகும் நிலையில் அமைந்துள்ளது.

இராமேசுவரம் தீவின் வழியாக இக்கால்வாய் செல்லுவதால், அதன் நீளம் 6-மைல்களாகக் குறைந்துள்ளது.

திட்டச் செலவு ரூ 37.5 கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

30 அடி இழுப்பு ஆழம் உள்ள கப்பல்களுக்கு இக்கால்வாய் பயன்படும்; பின்னர் இதை இன்னும் 32 அடிவரை தேவையான பெரிய கப்பல்களுக்கும் பயன்படுத்தச் செய்யலாம்.

அதனுடைய வருவாய் சாத்தியக் கூறுகள் இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளன; முதல் ஏழு ஆண்டுகளுக்கு-- அதாவது கால்வாய் வேலை முடிவுற்று ஆருண்டுக்காலம் வரையில்-- வட்டியில்லாக் கடனுக முதலீடு செய்யப்பட்டால், பின்னர் ஆண்டு ஒன்றுக்கு 7 சதவிகிதம் வட்டி கொடுத்த பின்னரும்கூடப் போதிய அளவுக்குச் செலவு போக இலாபம் பெறலாம் எனவும், 28-ஆண்டுகளுக்குள் இதற்கான முதலீட்டை முற்றிலும் மீட்கலாம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கால்வாயின் பாக்-நீரிணைப்பு (பாக்—ஜலசந்தி) மூலம் நேரடியாகச் சென்னை, கல்கத்தா முதலிய கீழக்கரைத் துறைமுகங்களுக்கு விரைவிலும், குறைந்த செலவிலும் கப்பல்கள் செல்ல இடமும்.

சென்னைக்குக் குமரி முனையிலிருந்து 353 கடல் வழி மைலகள் (நாட்டிகல் மைல்ஸ்) குறையும்.

விசாகப்பட்டினத்திற்கு 295 மைல்களும், கல்கத்தாவிற்கு 289 மைல்களும் குறையும்.

தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு நேரடியாக வருவதால், இலங்கையைச் சுற்றிச் செல்லும் தூரமும் குறையும்.

இத்திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துச் செயல்படுத்தவேண்டிய முயற்சிகள் குறித்து மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளும்.

# பிளவை உண்டாக்க மேற்கு நாடுகள் முயற்சிக்கின்றனவாம்

## முயற்சிகளை நிறுத்துமாறு இரஷ்யா எச்சரிக்கை

### செக் நாட்டுத் தலைவர்களுக்கும் கண்டனக் குறிப்பு

மாஸ்கோ, சூலை 23—

கடந்த சில நாட்களாக, தங்களுக்கு அதிகச் சுதந்தரம் வேண்டுமென்று உணர்ந்து, செக்கோஸ்லோவேகியா அரசும்-கம்யூனிஸ்டுக் கட்சியும் நடவடிக்கை எடுத்துவருவதை சோவியத இரஷ்யா கண்டித்திருக்கிறது.

சோஷலிச நாடுகளுக்குள் இப்படிப் பிளவை உண்டாக்க மேற்கு நாடுகளும், அமெரிக்காவும் முயற்சி செய்துவருவதாகவும் உடனடியாக அம்முயற்சிகளை நிறுத்திவிடுமாறும் இரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இரஷ்யாவின் பிடியிலிருந்து விலகி சுதந்தரமாக விரும்பும் செக். கம்யூனிஸ்டுக் கமிட்டியில் கொள்கை மாற்றத்தை உண்டாக்கிவரும் தலைவர்களையும் கடுமையாக எச்சரித்திருக்கிறது.

### 'பிராவ்தா' குற்றச்சாட்டு

இரஷ்யாவின் பாதுகாப்புக்கு செக்கோஸ்லேவேகியா முக்கியமானது என்றும், இங்கு குழப்பத்தை உண்டாக்க அமெரிக்காவும், மேற்கு ஜெர்மனியும் முயற்சி செய்வதாகவும் இரஷ்ய இதழ் 'பிராவ்தா' குற்றஞ்சாட்டியிருக்கிறது.

"சமாதானத்துக்காகவும் பாதுகாப்புக்காகவும் ஏற்பட்டுள்ள வார்சா ஒப்பந்த சோஷலிச நாடுகளின் சகதியை இவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்" என்றும் 'பிராவ்தா' எச்சரித்திருக்கிறது.

## பேராவூரணி தி.மு.க. கிளைத் தேர்தல்

"பேராவூரணி தி.மு.க. கிளைத் தேர்தல் 25—7—68 காலை 10 மணிக்கு, பேராவூரணி பயணிகள் விடுதியில், மன்னை கு. பாலகிருட்டினன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெறும்"

என்று தஞ்சை மாவட்டச் செயலாளரால் அறிவிக்கப்படுகிறது.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

### 24--7--68

**சென்னை 97-வது வட்டம்**

சைதை கைத்தறித் தொழிலாளர் சங்கச் சார்பில் ஓட்டல் பண்டங்கள் விலைக் குறைப்புக்குப் பாராட்டும் — தென்காசி வெற்றி விழாவும்; மாலை 6-மணிக்கு சடையப்ப முதலித் தெருவில்; தலைவர்: எம். லோகநாதன்; பேசுவோர்: உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், கி. வீரமணி, டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., எம்.கோபால எம்.சி., காஞ்சி மணிமொழியார்.

**பண்டசோழநல்லூர்**

தி.மு.க. சார்பில் தென்காசி வெற்றிவிழா; மாலை 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில், தலைவர்: வ. பாலகிருஷ்ணன்; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், எ. குபேர், எம்.ஏ. சண்முகம், சி. ஆறுமுகம், இராமன் எம்.எல்.ஏ., மு. தேவராசு, கு. காங்கேயன், தனஞ்செயன், வ. சம்பந்தம், புண்ணியகோட்டி, இரா. துளசிங்கம்.

**கீழப்பழூர்**

தி.மு.க.—எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு நடுத் தெருவில்; தலைவர்: மா. பிச்சைமுத்து; பேசுவோர்: எஸ்.ஏ.ஜி. ராபி, கோ. சிவப்பெருமாள், கி. நாகராசன். (மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

**சென்னை 35-வது வட்டம்**

மக்கள் மறுமலர்ச்சி மன்ற ஆண்டுவிழா; மாலை 7 மணிக்கு திரு.வி.க. நகரில்; தலைவர்: இரா. அங்கேசன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., கேரளியன், மு. மாசிலாமணி, ஜீவா. கலைமணி, இரா. சதாசிவம், கோ. லோகநாதன், மு. தமிழ்ச்செல்வன்.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மறைவு

சென்னை, சூலை 23—

தமிழகத்தின் தலைசிறந்த சமூக நலத் தொண்டர்களில் ஒருவரும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்டவரும், புற்றுநோய்க் சழக நிறுவனரும், அடையாறு ஔவை விடுதியை நிறுவியருமான டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, நேற்று பிற்பகல் இயற்கையெய்திய செய்தியை மிக்கத் துயரத்தோடு அறிவிக்கிருேம்.

1886-ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் பிறந்த திருமதி முத்துலட்சுமி ரெட்டி தம் இறுதி மூச்சுவரை மக்கள் நலத்துக்கே பாடுபட்டார்.

தமிழகத்தில் முதன் முதலாக டாக்டர் பட்டம்பெற்ற பெண்மணி இவரேயாவார். மருத்துவத் தேர்வுகளில் பல தங்கப் பதக்கங்களைப் பெற்றவர். இராவ்சாகிப் டி. சுந்தர ரெட்டியை கலப்பு மணம் செய்துகொண்டவர்.

1926-ல் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டில் இவர் கலந்துகொண்டார்.

தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகவும், டாக்டர் சுப்பராயன் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றத் துணைத் தலைவியாகவும் இருந்திருக்கிருர்.

கோயில்களில் தேவதாசி முறையை ஒழிக்கவும், அதற்கான சட்டம் இயற்றவும் திருமதி ரெட்டி துணைபுரிந்தார்.

சென்னை மாநகராட்சி மன்ற இணை உறுப்பினராகவும் (ஆல்டர்மென்) இருந்திருக்கிருர்; இப்பதவியேற்ற முதல் பெண்மணியும் இவரே.

சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ருமிருக்கிருர்.

இவரது அழியா நினைவுச்சின்னங்களாக அடையாறு புற்றுநோய்க் கழகமும், ஔவை விடுதியும் திகழ்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழநிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## அரியலூர் தி.மு.க. கிளை

### செயலாளர் பொறுப்புக்கு மறு தேர்தல்

"அரியலூர் தி.மு.க. கிளையின் செயலாளர் பொறுப்புக்கான மறுதேர்தல், 29-7-68 மாலை 4 மணிக்கு, அரியலூர் வழிப் போக்கர் விடுதியில், தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களைத் தேர்தல் ஆணையாளராகக் கொண்டு நடைபெறும்"

என மாவட்டச் செயலாளர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

## பெரம்பலூர் தி. மு. க. மறு தேர்தல்

'ஏற்கனவே அறிவித்திருந்த 'அறிவிப்பைத் தொடர்ந்து பெரம்பலூர் தி. மு. கழக மறு தேர்தல் சூலைத் திங்கள் 29-ம் நாள் காலை 10-மணிக்கு பெரம்பலூர் கழகக் கட்டிடத்தில், தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்"

என திருச்சி மாவட்டச் செயலாளர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

## பண்ருட்டி நகர தி.மு.க. கிளை தேர்தல்

ஆணையாளர்

**ப. உ. சண்முகம் எம்.எல்.சி.**

ஏற்கனவே அறிவித்திருந்ததை யொட்டி, பண்ருட்டி நகர தி.மு.க. கிளையின் தேர்தல் 28—7—68 ஞாயிறு காலை 10 மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் திரு. ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## பந்தநல்லூர் தி. மு. கழகக் கிளை மறுதேர்தல்

"தஞ்சை மாவட்டப் பந்தநல்லூர் கிளையின் மறு தேர்தல், 28—7—68 ஞாயிறு காலை 10-மணிக்கு பந்தநல்லூர் கடைத் தெரு சத்திரத்தில் நடைபெறும்.

"ஆணையாளர் பெயர் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் அறிவிக்கிருர்.

## தீக்காயமடைந்தோருக்குச் சிகிச்சை

தீ விபத்தினுல் பாதிக்கப்பட்டு-- உடம்பெல்லாம் வெந்து, கருகி மருத்துவமனைக்கு வந்துசேரும் நோயாளிகளுக்கு மருந்துபோடுவது சிக்கலான பிரச்சினை.

மருந்து போட்டு--மேலே கட்டுப் போடுவது என்ருல் கேட்கவே வேண்டாம்; அவர்களது கை, கால்களைத் தொட்டு அசைத்து கட்டுப்போடுவது மிகவும் கடினமானதாகும்.

இந்தக் குறையை நீக்கும் வகையில் பிரிட்டனில் ஒரு புதிய கருவி கண்டுபிடித்துள்ளனர்; அந்தக் கருவியின்படி, தீப் புண்பட்ட உடலை அல்லது உடலின் பாகங்களை அசைக்காமல் -- நகர்த்தாமல் கட்டுப் போடலாம்.

இந்த இயந்திரத்தை எடின்பரோ பல்கலைக் கழக மருத்துவ விஞ்ஞானப் பிரிவு கண்டுபிடித்துள்ளது. பரீட்சார்த்த முறையில் பயனுள்ளதாகக் கருதப்படும் இந்தவகை இயந்திரங்கள் விரைவில் எல்லா மருத்துவமனைகளிலும் இடம் பெறும்.